# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 18526/SCIC/2025**

திரு நா. சுந்தர் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
1 எண் இணைசார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
தாம்பரம், சென்னை 600 073

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 15.07.2025 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.08.2025 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 03.09.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.12.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகம், ராஜகீழ்பாக்கம் என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 15.07.2025 தேதியிட்டு அனுப்பிய மனுவில், 30.06.2025 அன்று தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அளித்த தடை ஆணை மனு தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக 4 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் ம. கார்த்திகேயன், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர் அலுவலகம், தாம்பரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் 11.08.2025 தேதியிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்ட பதிலில், 4 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரிய மனுதாரரின் 30.06.2025 தேதியிட்ட தடைமனுவில் சொத்து தொடர்பாக எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இன்றைய விசாரணையின்போது மனுதாரர் தனது தடைமனுவினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அம்மனுவில் சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது தெளிவாகிறது. எனவே, மனுதாரரின் வாதமானது சரியானது. அதனை ஆணையம் ஏற்கிறது.

5. **எனவே, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சட்டவிதிகளுக்குட்பட்டு சரியான தகவல்களை வழங்குவது தொடர்பாக, அச்சட்டத்தின் விதிகளை பொதுத் தகவல் அலுவலர் தவறாமல் பின்பற்றவேண்டும் என்றும், மேலும், தவறான தகவல்களை மனுதாரருக்கு வழங்குட்பட்சத்தில், சட்டத்தின் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்படுகிறது.**

6. **ஆகவே, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனுவிற்கு சரியான மற்றும் இனவாரியான தகவல்களை 30.09.2026 தேதிக்குள் விரைவுத்தபால் மூலம் அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 30.09.2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA 18526/SCIC/2025**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர் /
1 எண் இணைசார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
தாம்பரம், சென்னை 600 073

**மனுதாரர்**

திரு நா. சுந்தர்,
எண்.3A/32 முதல் குறுக்குத்தெரு,
ரங்கநாதபுரம், தாம்பரம்,
**சென்னை** 600 045

TK/PS

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005